வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 18.02.2026 நேரம் மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

- விசாகப்பட்டினம் கடற்கரைக்கு அப்பால் இன்று நடைபெற்ற, சர்வதேச கப்பல் தொகுப்பு மறு ஆய்வு நிகழ்வை, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, நேரில் பார்வையிட்டார்.
- பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், இண்டியா ஏஐ இம்பேக்ட் உச்சி மாநாட்டின் நிகழ்வுகளுக்கு இடையே, உலகத் தலைவர்கள் பலரை, இருதரப்பு ரீதியில் சந்தித்து பேசினார்.
- பிரதமர் திரு. நரேந்திர மோடி, மார்ச் 1ஆம் தேதி, புதுச்சேரிக்கு வருகை புரிந்து, பல்வேறு நலத் திட்டங்களை அறிவிக்க உள்ளதாக, மாநில பிஜேபி தலைவர் திரு.ராமலிங்கம் தெரிவித்துள்ளார்.
- புதுச்சேரியில், சிந்தனை சிற்பி சிங்காரவேலர் பிறந்த நாள் இன்று, அரசு சார்பில் கொண்டாடப்பட்டது.

---

***கடற்படை 1 (7)***

இந்தியாவின் கடல்சார் திறன்கள், மற்றும், சர்வதேச அளவிலான கடற்படை ஒத்துழைப்பில், இந்தியாவிற்குள்ள உறுதிப்பாட்டை பிரதிபலிக்கும் வகையில், விசாகப்பட்டினம் கடற்கரைக்கு அப்பால் இன்று நடைபெற்ற, சர்வதேச கப்பல் தொகுப்பு மறு ஆய்வு நிகழ்வை, முப்படைகளின் உச்சநிலைக் கமாண்டரும், குடியரசுத் தலைவருமான திருமதி திரௌபதி முர்மு, நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

*கடற்படை 2 (17)*

(வாய்ஸ்)

விசாகப்பட்டினம் கடற்கரை நெடுகிலும், நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டு இருந்த 71 இந்திய, மற்றும், வெளிநாட்டு கப்பல்களை, குடியரசுத் தலைவரின் ஐஎன்எஸ்-சுமேதா உலாப் படகில் இருந்து, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பார்வையிட்டார். கடலோரக் காவல்படை, வர்த்தகக் கப்பற்படை, மற்றும், ஆராய்ச்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடற் கலங்களும் இதில் அடங்கும். போர்க் கப்பல்கள், மற்றும், நீர்முழ்கிக் கப்பல்களின் அணிவகுப்பும், கடற்படை ஹெலிகாப்டர்கள் மூலமான உதவி-மீட்புப் பணிகளும், கடற்படை விமானங்களின் வான் சாகச காட்சிகளும், நிகழ்ச்சியில் இடம்பெற்றன.

உலகின் கடல்சார் அமைதியை பாதுகாக்க, உலக நாடுகளிடையே, ஒற்றுமை, நம்பிக்கை, மற்றும், கூட்டு பொறுப்பு அவசியம் என்று, குடியரசுத் தலைவர் இந்நிகழ்ச்சியில் பேசுகையில் கூறினார். இந்தியாவிற்கும், கடலுக்கும் இடையிலான, வர்த்தக, மற்றும், கலாச்சார உறவுகள், பல நூற்றாண்டு பழமையானவை என்றும், உலக அளவிலான கடல்சார் பாதுகாப்பில் இந்தியாவின் பங்கேற்பு, உலகமே ஒரு குடும்பம் என்ற மரபின் அடிப்படையில், அமைந்து இருப்பதாகவும், அவர் தெரிவித்தார். கடல் தாண்டிய பிராந்தியங்களுக்கு இடையே, பொதுவான

*கடற்படை 3 (8)*

பாதுகாப்பு, மற்றும், செழிப்பை மேம்படுத்தும் நோக்குடன், மஹா சாகர் கொள்கையை இந்தியா அமல்படுத்தி வருவதையும், அவர் சுட்டிக் காட்டினார்.

இந்தியாவின் வலுவான கடற்படை, நாட்டின் கடல்சார் நலன்களை பாதுகாப்பதில் மட்டுமின்றி, பிராந்திய அளவிலான ஸ்திரத் தன்மையை பராமரிப்பதிலும், முக்கிய பங்களித்து வருவதாக, குடியரசுத் தலைவர் கூறினார். பேரிடர் சம்பவங்கள், மற்றும், இதர இடர்பாடுகளின் போது,

மனிதாபிமான உதவிகளை மக்களுக்கு வழங்குவதில், கடற்படையினர் முன்னணியில் நிற்பதையும், அவர் சுட்டிக் காட்டினார்.

-----------------------------------

மோடி சந்திப்பு 1 (4)

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், செயற்கை நுண்ணறிவின் தாக்கங்கள் பற்றிய உச்சி மாநாட்டின் நிகழ்வுகளுக்கு இடையே, உலகத் தலைவர்கள் பலரை, இருதரப்பு ரீதியில் சந்தித்து பேசினார்.

மோடி சந்திப்பு *2 (15)*

(வாய்ஸ்)

புதுடெல்லியில், ஸ்பெயின் அதிபர் திரு. பெட்ரோ சான்சேஸ்-ஐ, பிரதமர் திரு. நரேந்திர மோடி சந்தித்த போது, வர்த்தகம், பொருளாதாரம், டிஜிட்டல் தொழில்நுட்பம், சுகாதாரம், பருவநிலை மாற்றம் உட்பட, பல்வேறு துறைகளில், இருதரப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. இந்தியாவிற்கும், ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையே வலுவான உறவுகளுக்கு, ஸ்பெயின் தொடர்ந்து ஆதரவு அளித்து வருவதை பிரதமர் பாராட்டினார். இந்தியா-ஸ்பெயின் கலாச்சார, சுற்றுலா, மற்றும், ஏஐ ஆண்டாக, நடப்பு 2026ஆம் ஆண்டு கடைபிடிக்கப் படுவதை அவர் சுட்டிக் காட்டினார். ஸ்பெயினில் இருந்து, பல்கலைக்கழகங்களின் பிரதிநிதிக் குழு ஒன்று இந்தியா வந்திருப்பதால், இருநாடுகளுக்கும் இடையே, மக்கள் நிலையிலான தொடர்புகள் மேலும் வலுப்பெறும் என அவர் மகிழ்ச்சி வெளியிட்டார்.

பின்லாந்து பிரதமர் திரு. பெட்டேரி ஆர்ப்போ உடனான சந்திப்பின் போது, இருதரப்பு வர்த்தகத்தை இரட்டிப்பாக்கும் இலக்குடன், இருநாடுகளும் செயல்பட்டு வருவதை பிரதமர் சுட்டிக் காட்டினார்.

*மோடி சந்திப்பு 3 (5)*

(வாய்ஸ்)

செர்பியா அதிபர் திரு. அலெக்சாண்டர் வூசிக், குரோயேஷியா அதிபர் திரு. ஆந்த்ரே பிளங்கோவிச், எஸ்டோனியா அதிபர் திரு. அலார் கேரிஸ், கஜகஸ்தான் பிரதமர் திரு. ஒல்ஜாஸ் பெக்தனேவ் ஆகியோரையும், கூகுள் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி சுந்தர் பிச்சை உள்ளிட்ட வர்த்தக தலைவர்களையும், இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடி சந்தித்து பேசினார்.

*மோடி சந்திப்பு 4 (5)*

இதற்கிடையே, மொரீஷியஸ் பிரதமர் திரு. நவீன்சந்திர ராம்கூலம், சுலோவேக்கியா அதிபர் திரு. பீட்டர் பெல்லிகிரினி, நெதர்லாந்து பிரதமர் திரு. டிக் ஸ்கூஃப் உட்பட, உலகத் தலைவர்கள் பலரும், இண்டியா ஏஐ இம்பேக்ட் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக, இன்று புதுடெல்லி வந்து சேர்ந்த வண்ணம் உள்ளனர்.

-----------------------------------

*வைஷ்ணவ் ஏஐ* (16)

செயற்கை நுண்ணறிவின் தாக்கங்கள் குறித்து,புதுடெல்லியில் நடைபெறும் உச்சி மாநாட்டில், மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், இன்று, தொழில்நுட்ப வல்லுனர்கள், கல்வியாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், மற்றும், தொழில் துறை தலைவர்கள் கூட்டத்திற்கு தலைமையேற்று, இது குறித்த வெள்ளை அறிக்கை ஒன்றையும் வெளியிட்டார். முன்னேறிய நாடாக மேம்படுவதற்கான, இந்தியாவின் பயணத்தில், முக்கிய தூணாகவே, செயற்கை நுண்ணறிவு திகழ்வதாக அவர் கூறினார். உற்பத்திக்கான பொறியியல்-தொழில்நுட்பத்துடன், செயற்கை நுண்ணறிவை ஒருங்கிணைப்பதன் மூலம், உற்பத்தித் திறன், மற்றும், போட்டித் திறனை அதிகரித்து, புதுமையாக்கம், மற்றும், புதிய தொழில் வாய்ப்புகளை

திறந்தவிட முடியும் என்று அவர் தெரிவித்தார். சிறு-குறு-நடுத்தர தொழில் துறையினர் உள்பட, அனைத்து தொழில் நிறுவனங்களையும் உள்ளடக்கியதாக, நாட்டின் ஏஜ சூழலை மேம்படுத்தி, எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்ற தொழிலாளர் வளத்தை உருவாக்குவதே, அரசின் குறிக்கோள் என்றும் அவர் கூறினார்.

----------------------------------

<u>*ராமலிங்கம்* (7)</u>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மார்ச் 1ஆம் தேதி, புதுச்சேரிக்கு வருகை புரிந்து, பல்வேறு நலத் திட்டங்களை அறிவிக்க உள்ளதாக, மாநில பிஜேபி தலைவர் திரு.ராமலிங்கம் தெரிவித்துள்ளார். இன்று மாநில பிஜேபி தலைமை அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் பேசகையில் அவர இதை தெரிவித்தார். புதுச்சேரியில் கூட்டணி குறித்தும், எந்த கட்சிக்கு எத்தனை இடங்கள் என்பதையும், கட்சித் தலைமை முடிவு செய்யும் என்றும், இன்னும் பல கட்சிகள் கூட்டணிக்கு வர இருப்பதாகவும், அவர்கூறினார்.

----------------------------------

<u>*சிங்காரவேலர்* (13)</u>

புதுச்சேரியில், சிந்தனை சிற்பி சிங்காரவேலர் பிறந்த நாளான இன்று, துணை நிலை ஆளுநர் திரு.கைலாஷ்நாதன், கடலூர் சாலையில் உள்ள அவரது திருவுருவ சிலைக்கு, அரசு சார்பில், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். காங்கிரஸ் சார்பில், முன்னாள் முதலமைச்சர் திரு. நாராயணசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வைத்திலிங்கம் ஆகியோரும், திமுக சார்பில், சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் திரு. ஆர். சிவா மற்றும் திமுக எம்.எல்.ஏக்களும், மற்றும், பல்வேறு மீனவர் அமைப்புகளின் பிரதிநிதிகளும், சிங்கார வேலர் சிலைக்கு, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். காரைக்காலில், குடிமைப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. திருமுருகன், சிந்தனை சிற்பி சிங்கார

வேலர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். சட்டமன்ற உறுப்பினர்கள், மற்றும், மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அதிகாரிகளும், சிங்காரவேலர் சிலைக்கு மாலை அணிவித்தனர்.

-----------------------------------

<u>*சாம்பல் புதன்*</u> (4)

சாம்பல் புதன் தினமான இன்று, புதுச்சேரியில், கிறிஸ்துவ சமூகத்தினர், 40 நாள் தவக்காலம் தொடக்கி உள்ளனர். அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்களிலும், இன்று நடைபெற்ற சிறப்பு பிரார்த்தனைகளில், பெரும் எண்ணிக்கையிலான விசுவாசிகள் கலந்து கொண்டனர்.

-----------------------------------

<u>*காரைக்கால் வரி முகாம்*</u> (8)

காரைக்கால் நகராட்சிக்குட்பட்ட வார்டுகளில், வரும் 20ஆம் தேதி முதல், அடுத்த மாதம் 3ஆம் தேதி வரை, சிறப்பு சொத்து வரி வசூல் முகாம்கள் நடைபெற உள்ளன. 20ஆம் தேதி கீழக்காசாக்குடி ஆதிபுரீஸ்வரர் ஆலயத்திலும், 21ஆம் தேதி, தலத்தெரு தங்கமாரியம்மன் ஆலயத்திலும், அதற்கடுத்த நாட்களில், வேறு பல இடங்களிலும் இம்முகாம்கள் நடைபெறும். சம்பந்தப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த பொது மக்கள், அந்தந்த தேதிகளில், இம்முகாமிற்கு சென்று, சொத்து வரி செலுத்தலாம் என, காரைக்கால் நகராட்சி ஆணையர் அறிவித்துள்ளார்.

-----------------------------------

<u>*ஏனாம் வாக்குப் பதிவு*</u> (10)

ஏனாமில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், மற்றும், வாக்களிக்க வேண்டியதன் அவசியம் குறித்த, 3 நாள் தீவிர விழிப்புணர்வு பிரச்சாரம், 19 வாக்குச்சாவடி பகுதிகளில், இன்று தொடங்கியது. வாக்குச்சாவடி நிலை வழிப்புணர்வுக் குழு சார்பில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள இப்பிரச்சார இயக்கம், இன்று 19 வாக்குச்சாவடி பகுதிகளில்

மேற்கொள்ளப் பட்டது. சம்பந்தப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த பள்ளி ஆசிரியர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், மற்றும் ஆஷா பணியாளர்கள் கலந்து கொண்டு, மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். ஏனாமில், மொத்தமுள்ள 42 வாக்குச்சாவடி பகுதிகளில், சுமார் ஆயிரத்து 600 புதிய வாக்காளர்கள் உட்பட, மொத்தம் 37 ஆயிரத்து, 664 வாக்காளர்கள் உள்ளனர்.

---------------------------------

வானிலை (16)

இன்று நிலநடுக்கோட்டிற்கு அருகில் உள்ள இந்தியப் பெருங்கடல் மற்றும், அதை ஒட்டிய தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளில் நிலவும், காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, அடுத்த 24 மணி நேரத்தில், தென்மேற்கு வங்கக் கடல், மற்றும், அதை ஒட்டிய, நிலநடுக்கோட்டு இந்தியப் பெருங்கடல் பகுதிகளுக்கு நகர்ந்து, வலுப்பெறக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றும், நாளையும், தமிழ்நாடு, மற்றும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில், வறண்ட வானிலை நிலவும் என்றும், வரும் 20ஆம் தேதி, தென்தமிழகம், கடலோர தமிழகம், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், லேசானது முதல், மிதமான மழை இருக்கலாம் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. மன்னார் வளைகுடா மற்றும் தென்தமிழகத்தின் கடலோர பகுதிகளிலும், குமரிக் கடல் பகுதியிலும், மணிக்கு 60 கிலோ மீட்டர் வரையிலான வேகத்தில், சூறாவளிக் காற்று வீசக் கூடும் என்பதால், மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில், குறைந்தபட்சமாக கொடைக்கானலில், 9 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகி உள்ளது.

---------------------------------

கிரிக்கெட் (10)

உலகக் கோப்பைக்கான ஐசிசி ஆடவர் 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில், யுஏஇ-தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையே, புதுடெல்லியில் இன்று நடைபெற்ற போட்டியில், தென்னாப்பிரிக்க அணி, 40 பந்துகள் எஞ்சி இருந்த நிலையிலேயே, 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. கொழும்பில் இன்று நடைபெறும் போட்டியில், பாகிஸ்தான் அணியால் நிர்ணயிக்கப்பட்ட 200 ரன் என்னும் வெற்றி இலக்கை நோக்கி, 2ஆவதாக ஆடும் நமீபியா அணி, சற்று முன்வரை, ----- ஓவர்களில், ---- விக்கெட் இழப்பிற்கு, ----- ரன் எடுத்து இருந்தது. இன்று இரவு 7 மணிக்கு, அகமதாபாத்தில் நடைபெறும் போட்டியில், இந்தியா-நெதர்லாந்து அணிகள் மோத உள்ளன.

-----------------------------------

மனோகர்லால் ஏஐ (9)

மத்திய எரிசக்தித் துறை அமைச்சர் திரு. மனோகர்லால், புதுடெல்லியில் நடைபெறும், இண்டியா ஏஐ இம்பேக்ட் உச்சிமாநாட்டில், அமைச்சகத்தின் கண்காட்சி அரங்கை தொடக்கி வைத்தார். டெல்லி மெட்ரோ நிறுவனத்தின் சார்பில் அமைக்கப் பட்டுள்ள அரங்கை அவர் பார்வையிட்டார். இதற்கிடையே, செயற்கை நுண்ணறிவின் தாக்கங்கள் குறித்த கண்காட்சியை, மத்திய அரசு வரும் 21ஆம் தேதி வரை, 1 நாள் நீட்டித்துள்ளது. கண்காட்சியில் பங்கேற்கும் நிறுவனங்கள், மற்றும், பார்வையாளர்களின் ஏகோபித்த வரவேற்பை கருத்தில் கொண்டு, இவ்வாறு முடிவு செய்யப் பட்டுள்ளது.

-----------------------------------

ஏஐ பயன்பாடு (9)

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை நன்னெறிகளின் அடிப்படையில் பொறுப்பான முறையில் பயன்படுத்துவது குறித்து, இண்டியா ஏஐ அமைப்பும், இன்டெல் இண்டியா நிறுவனமும் இணைந்து எற்பாடு செய்துள்ள இயக்கத்தில், நாடு முழுவதும் 24 மணி நேரத்தில், இரண்டரை லட்சம் மாணவர்கள் உறுதிமொழி ஏற்று, புதிய உலக சாதனை படைத்துள்ளனர். செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு குறித்த, பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையை பிரதிபலிக்கும் வகையில் இந்த சாதனை அமைந்து இருப்பதாக, மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

----------------------------------

பாலின பட்ஜெட் (10)

நடப்பு நிதியாண்டிற்கான, பாலின பட்ஜெட் அறிக்கையில், பெண்கள், மற்றும், பெண் குழந்தைகள் நலப் பணிகளுக்கு, 5.01 லட்சம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இது, முந்தைய நிதியாண்டின் அளவை விட, 11.55 சதவிகிதம் அதிகமாகும். மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் அண்மையில் தாக்கல் செய்த, வரவிருக்கும் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டிலும், பாலின பட்ஜெட் ஒதுக்கீடுகள் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளன. இந்த ஒதுக்கீடு மூலம் பயன்பெறும் மத்திய அரசுத் துறைகள், அமைச்சகங்கள், மற்றும், யூனியன் பிரதேசங்களின் எண்ணிக்கையும், 49ல் இருந்து, 53ஆக அதிகரித்து இருப்பதாக, மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

----------------------------------

***புத்தர் அஸ்தி* (7)**

இந்தியாவில் இருந்து தற்காலிகமாக இலங்கைக்கு எடுத்துச் செல்லப்பட்ட புத்த பிரானின் புனித அஸ்தி, இன்று காஞ்சிபுரம் வந்து சேர்ந்த போது, அங்குள்ள புத்த விகாரையில், பௌத்தர்கள் பலர், அஞ்சலி செலுத்தினர். பௌத்த ஸ்தூபியிலும், போதி தர்மர் மற்றும் மணிமேகலை சன்னிதியிலும், சிறப்பு பிரார்த்தனைகள் நடைபெற்றன. பல நூற்றண்டுகளுக்கு முன்னர், பல்லவர் ஆட்சி காலத்தில், தென்னிந்தியாவின் முக்கிய பௌத்த கேந்திரமாக காஞ்சிபுரம் திகழ்ந்தது குறிப்பிடத்தக்கது.

-----------------------------------